# பொது நூலக இயக்ககம்

## நூல்களைச் சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. படிவம்–A, படிவம் – B மற்றும் படிவம் – C யில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் சரியானபடி ஆங்கிலத்தில் (In Capital Letters ) பூர்த்தி செய்யப்படவேண்டும். படிவம் – C என்பது தங்கள் பதிப்பகம் மூலம் சமர்ப்பிக்கப்படும் நூல்களின் விவரங்கள் தொடர்பானது. படிவம் – C யினை Microsoft-Excel, Arial Font size 12 வடிவத்தில் அனைத்து கலங்களையும் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து குறுந்தகட்டிலும் பதிவு செய்து (both in CD and hard copy) சமர்ப்பிக்கப்படவேண்டும். (ஒரே பதிப்பகம் தமிழ் / ஆங்கிலம் நூல்கள் சேர்த்து வழங்கும்பட்சத்தில் தமிழ் நூல்களுக்கு தனியாவும், ஆங்கில நூல்களுக்கு தனியாகவும் குறுந்தகட்டில் பதிவு செய்து சமர்ப்பிக்கப்படவேண்டும்)
2. படிவங்களில் பதிப்பாளர் அல்லது விற்பனையாளர் தவிர வேறு எவரும் கையொப்பம் இடலாகாது.
3. ஒரு நூலுக்கு ஒரு மாதிரி மட்டும் சமர்ப்பித்தல் போதுமானது.
4. ஒன்றுக்கு மேற்ப்பட்ட நூல்களை ஒரே சமயத்தில் சமர்ப்பித்தால் ஒவ்வொரு நூலுக்கும் பதிவு கட்டணமாக ரூ.100/– வீதம் படிவம் – A யில் குறிப்பிட்டுள்ள பொது நூலக இயக்கக, இந்தியன் வங்கி கணக்கில் செலுத்திவிட்டு, செலுத்துச் சீட்டின் அசலின் (Original) பின்பக்கம், பதிப்பக முத்திரையிட்டு படிவம் – A வுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5. ஒவ்வொரு நூலிற்கும் தனித்தனியாக படிவம் – B யினை பூர்த்தி செய்து அந்தந்த நூலுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
6. 1954–ஆம் ஆண்டு நூல்கள் விநியோகச் சட்டத்தின்படியும் (Delivery of Books Act 1954) , Press and Registration of Books Act மற்றும் நூல்களை ஒப்பு நோக்கும் வசதிக்காகவும் கீழ்க்கண்ட நூலகங்களுக்கு நூல் பிரதி ஒன்றினை அனுப்பிவைத்து, அனுப்பப்பட்டதற்காக ஒப்புதலின் ஆதாரத்தை அசலாக (Original) மேற்படி படிவம் A-யுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

    1. The Librarian,<br>National Library, Belvadere, Kolkata – 27.
    2. The Librarian,<br>Central Library, Town Hall, Mumbai – 1.
    3. The Librarian,<br>Connemara Public Library, Egmore, Chennai – 8.
    4. The Director,<br>Legal Deposit Division, Delhi Public Library, Sarojini Nagar,<br>New Delhi – 23.
    5. Deputy Director,<br>Parliament Library, Parliament House Annex, New Delhi – 110 001.
    6. The Registrar of Books,<br>Office of the Director of Information and Public Relation,<br>Fort St. George, Chennai – 9.
    7. World Tamil Sangam, Tamil Sangam salai, Madurai – 1.

7. சமர்ப்பிக்கப்படும் மாதிரி நூல்கள் திருப்பித் தரப்படமாட்டாது.

8. நூலின் விலை, நூலில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இரப்பர் முத்திரை அல்லது தாள் ஒட்டுதல் முறையில் விலைகள் இருப்பின் அந்நூல்/நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள நூல் தேர்வுக் குழுவிற்கும், பொது நூலக இயக்குநருக்கும் நூலைத் தேர்வு செய்யவோ அல்லது தள்ளுபடி செய்யவோ அதிகாரம் உண்டு.

10. PIN அடித்து கட்டுமானம் செய்த நூல்கள், ஜெராக்ஸ் படிகள், DTP நூல்கள், அதிக இடைவெளிவிட்டு அச்சிடப்பட்ட நூல்கள், தலைப்பு பக்கம் ஒட்டப்பட்ட நூல்கள், 64 பக்கத்திற்கு குறைவான நூல்கள், பதிப்பாண்டு திருத்தம் செய்த நூல்கள் ஆகியவை பரிசீலனைக்கு கட்டாயமாக ஏற்கப்படமாட்டாது.

11. பொது நூல்கள், அதிகபட்சம் 12 புள்ளிகளும், சிறுவர் நூல்கள் 14 புள்ளிகள் வரையிலும் அச்சிடப்பட்டிருக்கலாம்.

12. தரமான வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்ட நூல்கள் மட்டுமே தேர்வுக்கு பரிசீலிக்கப்படும். நியூஸ்பிரிண்ட் அல்லது தரமில்லாத தாள்களில் அச்சான நூல்கள் வாங்கப்படமாட்டாது.

13. செலுத்தப்பட்ட நூல் பதிவுக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திரும்பத் தரப்படமாட்டாது.

14. படிவம் – Bயில் கொடுக்கப்பட்டுள்ள உறுதிமொழிகளின் கீழ் பதிப்பாளர் பதிப்பக முத்திரையிட்டு தவறாமல் கையொப்பமிடவேண்டும், படிவம் – Bயில் பதிப்பகத்தாரின் கையெழுத்து மற்றும் முத்திரையிடாத நூல்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

15. பரிசீலனைக்கு பெறப்படும் எல்லா நூல்களுக்கும் ஆணை வழங்குவது நடைமுறையில் சாத்தியமில்லை. அரசால் நியமிக்கப்பட்டுள்ள நூல் தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் நூல்களின் பதிப்பகங்களுக்கு மட்டுமே கொள்முதல் நூல் ஆணை வழங்கப்படும். தேர்வுக்குழு தேர்வு செய்த நூல்களிலிருந்து நிதிநிலைக்கேற்ப தேவையான படிகள் மட்டுமே வாங்கப்படும். இது தொடர்பாக பொது நூலக இயக்குநரின் முடிவே இறுதியானது.

16. தேர்வு செய்யப்பட்ட நூல்களை, அரசால் நிர்ணயிக்கும் விலைக்கு அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட மைய நூலகங்களுக்கு பதிப்பாளர்கள் தமது சொந்த செலவில் நூல்களை அனுப்பிவைக்கவேண்டும்.

17. தேர்வு செய்யப்பட்ட நூல்களை வாங்கும் போது அவற்றின் விலையில் 2.5 சதவீதம் தமிழ்நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர் நலவாரிய நிதிக்காகப் பிடித்தம் செய்யப்படும்.

18. படிவத்தில் குறிப்பிட்டுள்ள பதிப்பாளர் / விற்பனையாளர் பெயருக்கு மட்டும் தான் ஆணை மற்றும் நூல்களுக்கான தொகை காசோலை / வரைவோலையாக வழங்கப்படும்.

19. பூர்த்தி செய்யப்பட்ட படிவம்–A , படிவம் – B மற்றும் படிவம் – Cயுடன் (குறுந்தட்டின் மேல் Marker பேனாவால் பதிப்பகத்தின் பெயர், முகவரி மற்றும் கைபேசி எண்ணை கண்டிப்பாக குறிப்பிடப்படவேண்டும்.) மாதிரி பிரதி நூல்களை **பொது நூலக இயக்ககம், 737/1, அண்ணா சாலை, சென்னை–600002 (Directorate of Public Libraries, 737/1, Anna Salai, Chennai – 600 002)** என்ற முகவரியில் ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கவேண்டிய **கடைசி நாள். <u>11.12.2020</u>** ஆகும்.

மேலும் விவரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண். **044–28524263.**

**பொது நூலக இயக்குநர்.**